إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أُولَٰئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ ۝٧

جَزَاؤُهُمْ عِنْدَ رَبِّهِمْ جَنَّاتُ عَدْنٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ

فِيهَا أَبَدًا ۖ رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ ۚ ذَٰلِكَ لِمَنْ خَشِيَ رَبَّهُ ۝٨ ع ٨ ٢٣

## سُورَةُ الزِّلْزَالِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانِ آيَاتٍ

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

إِذَا زُلْزِلَتِ الْأَرْضُ زِلْزَالَهَا ۝١ وَأَخْرَجَتِ الْأَرْضُ أَثْقَالَهَا ۝٢

وَقَالَ الْإِنْسَانُ مَا لَهَا ۝٣ يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ۝٤ بِأَنَّ

رَبَّكَ أَوْحَىٰ لَهَا ۝٥ يَوْمَئِذٍ يَصْدُرُ النَّاسُ أَشْتَاتًا لِيُرَوْا

أَعْمَالَهُمْ ۝٦ فَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ ۝٧ وَمَنْ

يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ ۝٨ ع ٨ ٢٤

## سُورَةُ الْعَادِيَاتِ مَكِّيَّةٌ وَهِيَ إِحْدَىٰ عَشْرَةَ آيَةً

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

وَالْعَادِيَاتِ ضَبْحًا ۝١ فَالْمُورِيَاتِ قَدْحًا ۝٢ فَالْمُغِيرَاتِ صُبْحًا ۝٣

فَأَثَرْنَ بِهِ نَقْعًا ۝٤ فَوَسَطْنَ بِهِ جَمْعًا ۝٥ إِنَّ الْإِنْسَانَ لِرَبِّهِ

لَكَنُودٌ ۝٦ وَإِنَّهُ عَلَىٰ ذَٰلِكَ لَشَهِيدٌ ۝٧ وَإِنَّهُ لِحُبِّ الْخَيْرِ لَشَدِيدٌ ۝٨

7. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, நற்செயல்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகச்சிறந்தவர்கள்.

8. அவர்களுடைய (நற்) கூலி அவர்களின் இரட்சகனிடம் (அத்னு எனும்) நிலையான சுவனங்களாகும்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; என்றென்றும் (அவர்கள்) அவற்றில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான்; அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள். அது, எவர் தன் இரட்சகனுக்குப் பயப்படுகிறாரோ, அவருக்குரியதாகும்.

---

அத்தியாயம் : 99

## அல்ஜில்ஜால் _ அதிர்ச்சி

வசனங்கள் : 8 மதனீ ருகூஉ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. பூமியானது (அதன் அடிப்பாகத்திலிருந்து)கடுமையான அசைவாக அசைக்கப்பட்டு விடும்போது_

2. இன்னும் பூமி, தனது சுமைகளை (எல்லாம்) வெளிப்படுத்திவிடும்போது_

3. இன்னும் மனிதன்,(திடுக்கிட்டு)"இதற்கென்ன நேர்ந்தது?" என்று கூறிவிடும்போது_

4. அந்நாளில் (பூமியான) அது, தனது செய்திகளை (மனிதர்களுக்கு) அறிவிக்கும்_

5. நிச்சயமாக உமதிரட்சகன் (இவ்வாறு அறிவிக்குமாறு) அதற்கு(க்கட்டளை யிட்டு) வஹீமூலம் அறிவித்ததன் காரணமாக!

6. (அவ்வாறு பூமி அசைக்கப்பட்டு அதன் வயிற்றினுள் உள்ளதை வெளியாக்கிவிடும்) அந்நாளில் மனிதர்கள் தங்கள் செயல்கள் அவர்களுக்கு காட்டப்படுவதற்காக பல பிரிவினர்களாகப் புறப்பட்டு வருவார்கள்.

7. எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அத(ன் பய)னைக்கண்டுகொள்வார்.

8. இன்னும், எவர் ஓர் அணுவளவு தீமையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அத(ன் கேடி)னைக் கண்டு கொள்வார்.

---

அத்தியாயம் : 100

## அல் ஆதியாத் _ வேகமாக ஓடக்கூடியவை

வசனங்கள் : 11 மக்கீ ருகூஉ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மூச்சிரைக்கும் சப்தத்தோடு (போர்க்களத்தில் எதிரிகளைத்தாக்க) அதிவேகமாக ஓடுகின்றவற்றின் (_குதிரைகளின்) மீது சத்தியமாக!

2. பின்னர், (செல்லும் வேகத்தில் அவற்றின் குளம்புகள் கற்களில் மோத) தீப்பொறியை பறக்கச்செய்பவற்றின் மீதும் சத்தியமாக!

3. பிறகு, அதிகாலையில் வேகமாக (எதிரிகள் மீது) பாய்ந்து செல்பவற்றின் மீதும் சத்தியமாக!

4. (அதிகாலையில் அவ்வாறு அதி வேகமாகச் செல்லும்போது) அதனால் புழுதியை கிளப்புகின்றவற்றின் மீதும் சத்தியமாக!

5. பின்னர், (எதிரிகளின்) படைகளுக்கு மத்தியில் செல்கின்றவற்றின் மீதும் சத்தியமாக!

6. நிச்சயமாக மனிதன் தன் இரட்சகனுக்கு நன்றி கெட்டவனாகவே இருக்கின்றான்;

7. மேலும், நிச்சயமாக அவனே இதற்கு சாட்சியாகவும் இருக்கின்றான்;

8. இன்னும், நிச்சயமாக (மனிதனாகிய) அவன், செல்வத்தை விரும்புவதில் மிகக்கடுமையானவனாக இருக்கின்றான்.